கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

*DEPOSITION OF WITNESS –Crl. Misc.39*

(Chapter XXIII Code of Criminal Procedure)

**STC Case .No. 25/2026**

Deposition of witness for Petitioner: P.W. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. முத்துலெட்சுமி |
| கணவர்/ தந்தை பெயர் | : | தங்கபாண்டி |
| தொழில் | : | வீட்டில் உள்ளேன் |
| கிராமம் | : | மதுரை |
| தாலுகா / மாவட்டம் | : | மதுரை |
| வயது | : | 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20/05/2026

*(*எதிரி ஆஜர்*.* மனுதாரர் ஆஜர்*.* எதிர்மனுதாரர் *Party In Person*ஆக முன்னிலையாகி அதன்பேரில் குறுக்கு விசாரணை*)*

**எதிரி தரப்பில் *06.05.2026*ம் தேதிய குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2024 ஆம் வருடம் தீபாவளிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிரி எங்கள் வீட்டிற்கு முன்பு புதிதாக வாங்கிய ஆடைகளை வைத்துவிட்டு சென்றார் என்றால் எனக்கு தெரியாது. நான் வீட்டில் இல்லாத நேரத்தில் வைத்திருக்கிறீர்கள். மதுரை நீதிமன்றத்தில் உள்ள GWOP வழக்கில் சமரசத்திற்காக அழைக்கப்பட்ட போது நான் மேற்படி சமரசத்திற்கு ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அசல் DVC வழக்கில் சொந்த வீட்டில் இருந்து கொண்டே வாடகை வீட்டில் இருந்ததாக பொய்யாக பழைய ஆவணங்களை காட்டி மாதம் ரூ.2500 கட்டுவதாக கூறி உத்தரவு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 22.12.2023 எதிரியாகிய நான் பள்ளி கட்டணங்களை கட்டுவதற்கு தயாராக இருக்கிறேன் என்று உங்களுக்கு கடிதம் அனுப்பினேன் என்றாலும் மேற்படி ஆவணமானது மேல்முறையீட்டு வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் நீதிமன்றத்தில் இருந்து வரும் கடிதங்களை மட்டும் தான் என்னால் பரிசீலிக்க முடியும். ஏனெனில் நீங்கள் அடிக்கடி எனக்கு மிரட்டல் கடிதமும் அனுப்பி இருந்தீர்கள்.

எதிரி எப்போதும், குழந்தைக்கும் உங்களுக்கும் பராமரிப்பு தொகை செலுத்த எதிர்ப்பு தெரிவித்தது இல்லை என்றால் சரியல்ல. குழந்தையின் பள்ளி கட்டணத்தை நேரடியாக எதிரி பள்ளியில் செலுத்த எனக்கு சம்மதமா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தின் மூலமே வாங்கிக் கொள்கிறேன். ஏனெனில் ஒரு மாதங்கள் மட்டும் கட்டிவிட்டு நீங்கள் சில மாதங்கள் கட்டாமல் போய்விடுவீர்கள். எதிரி அஞ்சல் நிலையத்தில் கிஷான் விகாஷ் திட்டத்தின் மூலம் குழந்தையின் பெயரில் ஐந்து இலட்சம் வைப்பீடு செய்துள்ளேன் என்றாலும், செல்வமகள் சேமிப்பு திட்டத்தின் மூலம் நான் குழந்தையின் பெயரில் இரண்டு லட்சம் ரூபாய் வைப்பீடு செய்துள்ளேன் என்றாலும் மதுரை மூன்றாவது சார்பு நீதிமன்றத்தில் நீதிமன்ற வைப்பீடு தொகை ரூபாய் 2 லட்சம் செலுத்தியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மதுரை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையை எந்த நேரம் வேண்டுமானாலும் என்னால் எடுத்துக் கொள்ள முடியும் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நான் இந்த நீதிமன்றத்தில் தான் ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தேன். திருமணத்திற்கு பிறகு எதிரி வாங்கிக் கொடுத்த ஐந்து சென்ட் நிலத்தை எனது தந்தை வாங்கி கொடுத்ததாக பொய்யாக சொல்லி உள்ளேன் என்றாலும் திருமணத்திற்கு பிறகு எதிரி எனக்கும், எனது குழந்தைகளுக்கும் வாங்கி கொடுத்த 20 பவுன் நகைகளையும் கையில் கொடுத்த ரொக்க பணம் 3 லட்சத்திற்கு மேல் பணத்தினை நான் மறைத்து விட்டு பொய்யாக பணம் பறிக்க வேண்டும் என்ற ஆசையில் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.05.20 12:25:31 +0530